**சுருக்கம்**

சிலை அமைத்தல் – விருதுநகர் மாவட்டம் – ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம் மற்றும் நகரம் –நகர பேருந்து நிலையத்தில் தந்தை பெரியாரின் முழு உருவ வெண்கலச் சிலை அமைக்க அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி5) துறை

அரசாணை (நிலை) எண்.244 நாள்: 14 .12. 2009.

படிக்க :

1. அரசாணை (நிலை) எண். 221, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி5) துறை, நாள். 20.11.1998.

மேலும் படிக்க:

2. விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க.சி.1/ 46656/ 2007 நாள் 2.3.2009.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர் கடிதம் ந.க எண். 18030/2009/ எம்.1, நாள் 2.9.2009.

–––

**ஆணை**:

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம் மற்றும் நகரம் நகரப்பேருந்து நிலையத்தில், ஸ்ரீவில்லிபுத்தூர் பகுத்தறிவாளர் கழகம் சார்பில், தந்தை பெரியார் சிலை அமைப்புக்குழு, வெண்கலத்தாலான தந்தை பெரியார் முழு உருவச் சிலையினை, ஸ்ரீவில்லிபுத்தூர் நகரம், வார்டு எண்.4, பிளாக் எண்.5 நகரளவை எண்.448–ல் அமைந்துள்ள, நகராட்சிக்குப் பாத்தியமான அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தின் மையப்பகுதியில், அறிஞர் அண்ணா சிலை, எம்.ஜி.ஆர்.சிலை மற்றும் ஹைமாஸ் லைட்டுக்குப் பின்புறம் அமைக்க, தந்தை பெரியார் சிலை அமைப்புக்குழுவின் செயலாளர் திரு.இரா.பகீரதன் என்பவர் விண்ணப்பித்து அரசின் அனுமதி கோரியுள்ளதாகவும், சிலையை தங்களது சொந்த செலவில் அமைத்து பராமரிப்பதாகவும், நகராட்சி தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைக்கு கட்டுப்படுவதாக உறுதிமொழி அளித்துள்ளதாகவும், இதற்கு ஸ்ரீவில்லிபுத்தூர் நகர்மன்றம், தீர்மானம் (எண்.258) நிறைவேற்றி உள்ளதாகவும், விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் தனது முதலாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

2. ஸ்ரீவில்லிபுத்தூர் வருவாய் வட்டாட்சியர், அவரது அறிக்கையில். ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4, பிளாக் எண்.5. நகரளவை எண்.448– ல் அமைந்துள்ள அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தின் மையப்பகுதியில், ஏற்கனவே முழுஉருவ எம்.ஜி.ஆர்.சிலை, மற்றும் மார்பளவு அறிஞர் அண்ணா சிலை உள்ளதாகவும், இச்சிலைகளுக்கு பின்புறம் பெரிய மின்விளக்கு இரும்பு கம்பம் உள்ளதாகவும், இந்த இரும்பு கம்பத்திற்கு பின்புறம் தந்தை பெரியார் சிலை அமைக்க உள்ளதாகவும், சிலை அமைப்பதால் சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏதும் ஏற்பட வாய்ப்பு இல்லை என தெரிவித்துள்ளார். சிலை அமைப்பது குறித்து ஆட்சேபனைகள் ஏதும் வரப்பெறவில்லை எனவும் ஏற்கனவே பேருந்து நிலையத்திற்குள் இரண்டு சிலைகள் நிறுவப்பட்டுள்ள நிலையில், தற்போது தந்தை பெரியர் சிலை அமைக்க அனுமதி வழங்கலாம் என சிவகாசி வருவாய் கோட்டாட்சியர் பரிந்துரை செய்துள்ளார்.

3. ஸ்ரீவில்லிபுத்தூர் நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்டப் பொறியாளர் அவரது அறிக்கையில், சிலை நிறுவ அனுமதி கேட்கப்பட்டுள்ள புலம் நகராட்சிக்கு உட்பட்ட இடமாக இருப்பதால், நெடுஞ்சாலைத்துறையின் தடையின்மைச் சான்று தேவையில்லை எனத்

தெரிவித்துள்ளார். மேலும் விருதுநகர் மாவட்ட காவல் கண்காணிப்பாளரும், அவரது அறிக்கையில், ஸ்ரீவில்லிபுத்தூர் பேருந்து நிலையத்தில் ஏற்கனவே அறிஞர் அண்ணா மற்றும் எம்.ஜி.ஆர். ஆகியோர் சிலைகள் உள்ளதாகவும், மேற்படி சிலைகளுக்கு பின்புறம் தந்தை பெரியார் சிலை அமைக்கப்படுவதால் போக்குவரத்திற்கு இடையூறு ஏதும் ஏற்படவோ, சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏதும் ஏற்படவோ வாய்ப்பு இல்லை எனத் தெரிவித்து, சிலை அமைக்க ஆட்சேபனை ஏதும் இல்லை எனத் தெரிவித்துள்ளதாகவும், எனவே மேற்கண்ட இடத்தில் தந்தை பெரியாரின் சிலையை அமைக்க அனுமதி வழங்கலாம் என விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் தனது முதலாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

4. நகராட்சி நிர்வாக இயக்குநர் தனதறிக்கையில், சிலை அமைப்பது குறித்து ஸ்ரீவில்லிபுத்தூர் நகர்மன்ற தீர்மானம் எண்.258ல் நிறைவேற்றியுள்ளதாலும், சிலை அமைப்புக் குழுவினர், சிலையை தங்களது சொந்த செலவில் அமைத்து பராமரிப்பதாக உறுதிமொழி அளித்துள்ளதாலும், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம் மற்றும் நகரம் வார்டு எண்.4ல் நகராட்சிக்கு பாத்தியமான அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தின் மையப்பகுதியில், ஏற்கனவே அமைந்துள்ள அறிஞர் அண்ணா மற்றும் எம்.ஜி,ஆர். சிலைகளுக்கு பின்புறம் தந்தை பெரியாரின் முழு உருவ வெண்கலச் சிலையை அமைக்க அரசு ஆணை (நிலை) எண். 221, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 20.11.98–ன்படி அனைத்து நிபந்தனைகளுக்கும் உட்பட்டு தந்தை பெரியாரின் சிலையை அமைக்க அனுமதி வழங்கலாம் என்று பரிந்துரை செய்துள்ளார்.

5. மேற்கண்ட சூழ்நிலையில், விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் செயற்குறிப்பின் மீது, நகராட்சி நிர்வாக இயக்குநர் பரிந்துரைத்துள்ள கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம் மற்றும் நகரம் வார்டு எண்.4, பிளாக் எண்.5 நகரளவை எண்.448–ல் அமைந்துள்ள நகராட்சிக்குப் பாத்தியமான,அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தின் மையப்பகுதியில், ஏற்கனவே அமைந்துள்ள அறிஞர் அண்ணா மற்றும் எம்.ஜி.ஆர். சிலைகளுக்கு பின்புறத்தில், தந்தை பெரியாரின் முழு உருவ வெண்கலச் சிலையினை, அரசு ஆணை (நிலை) எண். 221, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 20.11.98–ன்படி அனைத்து நிபந்தனைகளுக்கும் உட்பட்டு அமைக்க, ஸ்ரீவில்லிபுத்தூர் பகுத்தறிவாளர்கழக தந்தைபெரியார் சிலைஅமைப்புக்குழுவின் செயலாளர் திரு.இரா. பகீரதன் அவர்களுக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

**//ஆளுநரின் ஆணைப்படி//**

**நிரஞ்சன் மார்டி,**
**அரசுச் செயலாளர்.**

பெறுநர்

நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை– 600 005.
மாவட்ட ஆட்சித் தலைவர், விருதுநகர் மாவட்டம், விருதுநகர்.
நகராட்சி ஆணையர், ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி, விருதுநகர் மாவட்டம்.
திரு. இரா. பகீரதன், தந்தை பெரியார் சிலை அமைப்புக்குழு, 20C, புறவழிச்சாலை, (ஆயுள் காப்பீட்டு கழகம் எதிரில்) ஸ்ரீவில்லிபுத்தூர் – 626 125, விருதுநகர் மாவட்டம்.

**நகல்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலரின் தனிச் செயலாளர், சென்னை–600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) துறை, சென்னை–600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்.**